# ‘குடும்ப நல்லுறவு மையநிறுவனங்கள்’ (Family Relationship Centres)

அவுஸ்திரேலிய அரசினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள நான்கு ‘குடும்ப நல்லுறவு மையநிறுவனங்க’ ளில் முன்னணி வகிக்கும் முகமை RAV -யாகும்.

குடும்ப உறவுகளை வலுப்படுத்துதல், குடும்பத்தினர் ஒற்றுமையாய் வாழ உதவுதல் மற்றும் பிரிவுகளில் ஒத்தாசை செய்தல் ஆகிய சேவைகளை வழங்குவது இந்த நிறுவனங்களது குறிக்கோளாகும். தமது குழந்தைகளின் தேவைகளை வலுவாய்க் கவனத்தில் கொள்ளுமாறு பிரிவுறும் பெற்றோர்களை இம் மையங்கள் ஊக்குவிக்கின்றன.

நடைமுறைக்கேற்ற பிள்ளை வளர்ப்பு ஏற்பாடுகளைக் குடும்பத்தினர் உருவாக்கிக்கொள்ள உதவும் நோக்கில் தனிநபர் மற்றும் கூட்டு ஆலோசனை அமர்வுகளை ‘குடும்ப நல்லுறவு மையங்கள்’ (FRCs) ஏற்பாடு செய்கின்றன. குடும்பங்களுக்கு உதவுவதற்கென நடைமுறைக்கேற்ற பல குடும்ப விடயங்கள் குறித்த தகவல்களை வழங்கும் குழும தகவல் அமர்வுகளையும் கருத்தரங்குகளையும் இம் மையங்கள் ஏற்பாடு செய்கின்றன.

மூன்று மணி நேரம் நீடிக்கும் ‘இணைவு குடும்ப சச்சரவுத் தீர்வு’ (Joint Family Dispute Resolution) ஆலோசனை ஒன்றை இமந்த் மையநிறுவனங்கள் வழங்கும்.

## நம் நாட்டு மக்கள்

அறிவுரை-ஆலோசனை வழங்கல், குடும்ப சச்சரவுகளுக்குத் தீர்வு காணல், திறன் வளர்ப்பு மற்றும் பயிற்சி வழங்கல் ஆகிய சேவைகளில் தேர்ச்சி பெற்ற தொழிலர்கள் RAV அமைப்பில் பணியாற்றுகின்றனர்.

மனித வளங்கள், தொடர்பாடல்கள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் நிதிசார் நிர்வாகம் போன்ற பல துறைகளில் எமது முன்னனி ஊழியர்களுக்கு ‘கூட்டு நிறுவன சேவைகள்’ ஆதரவு வழங்குகின்றன.

நாங்கள் அனைவரும் இணைவாய் செயல்பட்டு, எமது வாடிக்கையாளர்களது தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதை உறுதி செய்வதில் கவனமாக இருக்கிறோம்.

## மேலதிகத் தகவலுக்கு:

எமது மைநியறுவனங்கள் அமைந்துள்ள இடங்கள் குறித்த விவரங்கள் உள்ளடங்க, பொது விசாரிப்புகளுக்கு உள்ளூர் தொலைபேசி கட்டணத்திற்கு 1300 364 277 எனும் இலக்கத்தை அழையுங்கள், அல்லது **www.relationshipsvictoria.com.au** எனும் எமது வலைத்தளத்திற்கு விஜயம் செய்யுங்கள்.

அவுஸ்திரேலிய அரசின் நிதியுதவி வழங்கப்படுகிறது.

‘குடும்ப நல்லுறவு மேம்பாட்டு அவுஸ்திரேலிய சேவை நிறுவனம்’

விக்டோரிய மாநிலம்

‘குடும்ப நல்லுறவு மேம்பாட்டு அவுஸ்திரேலிய சேவை நிறுவனம்’

விக்டோரிய மாநிலம்



# பெருமிதத்திற்குரிய நமது பல்கலாசாரம்

TAMIL

# எம்மைப் பற்றி...

‘குடும்ப நல்லுறவுகள் - ஒரு அவுஸ்திரேலிய சேவை நிறுவனம்’ (Relationships Australia (Victoria) - RAV) என்பது குடும்ப உறவுகளை வலுப்படுத்துவதற்கென சேவைகள் வழங்கும் ஒரு முன்னணி நிறுவனமாகும்.

நல்ல ஆரோக்கியமான, ஒருவரையொருவர் மரியாதையோடு நடத்தும் வகையிலான நல்லுறவுகளை வளர்த்துக்கொள்ள விக்டோரிய மாநில வாசிகளுக்கு உதவுவது எமது நோக்காகும்.

சமூக சேவையை அடிப்படையாய்க் கொண்ட, இலாப நோக்கற்ற அமைப்பாகிய நாங்கள் எந்தவொரு மத அடிப்படையிலும் இயங்குபவர்கள் அல்ல, மற்றும் ஒருவரது மதம், வயது, பாலினம், பாலியல் நாட்டம், வாழ்க்கைப் பாணிகள், கலாசாரப் பின்புலம் அல்லது பொருளாதார சூழ்நிலைகள் போன்றவை எதுவாயிருப்பினும் சமூகத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் உதவுவதே எமது இலக்கு.

மெல்பர்ன் பெருநகர்ப் பகுதியிலும், உள்ளக விக்டோரிய மாநிலப் பகுதிகளிலும் அமைந்துள்ள 12 மையநிறுவனங்கள் வழியாக நாங்கள் எமது சேவைகளை வழங்கி வருகிறோம்.

வாடிக்கையாளர்களது கட்டணம் செலுத்தும் திறனைப் பொறுத்து பல சேவைகளை இலவசமாகவோ அல்லது ஒரு கணிசமான கட்டணத்திற்கோ நாங்கள் வழங்குகிறோம்.

# எமது நோக்கம்

நல்லுறவுகளை வலுப்படுத்தும் விசேடமான சேவைகளை வழங்குவதன் மூலம் தனிநபர்கள், தம்பதிகள், குடும்பங்கள் மற்றும் சமூகத்தினருக்கு உதவி செய்து அவர்களது வாழ்க்கைகளை மேம்படுத்துவதே எமது நோக்கம்.

# எமது விழுமியங்கள்

வாழ்க்கையின் மையமாய்ப் போற்றப்படும் பின்வரும் நற்பண்புகளில் RAV ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ளது:

- மரியாதை
- நேர்மை
- ஒளிவு மறைவற்ற தன்மை
- பொறுப்பு
- உயர் தரம்
- சிறப்பு

# எமது சேவைகள்

பல்வேறுபட்ட நல்லுறவு ஆதரவு சேவைகளை RAV வழங்குகிறது.

**‘அறிவுரை-ஆலோசனை வழங்கல்’**

தற்போது உள்ள உறவினை எவ்வாறு வளர்த்து மேம்படுத்தலாம் என்பது குறித்து யோசிப்பது, அல்லது இப்போது இருக்கும் உறவில் என்ன பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன என்பதைப் பற்றி ஆலோசிப்பது போன்ற மக்களுக்கிடையே உள்ள உறவுகள் குறித்த அனைத்து அம்சங்களையும் எமது சேவைகள் கவனித்தில் கொள்ளும். பின் வருவன இதில் உள்ளடங்கும்:

- குடும்பங்களுக்கான அறிவுரை-ஆலோசனை
- ஆடவர் மற்றும் மகளிருக்கான அறிவுரை-ஆலோசனை
- திருமணத்திற்கும் முன்பாக வழங்கப்படும் அறிவுரை-ஆலோசனை திட்டம் (pre-marriage program)
- உறவுகள் குறித்த அறிவுரை-ஆலோசனை
- நீண்ட காலம் உறவற்ற நிலையிலிருப்போவறட்சியினால் பாதிக்கப்பட்டோ ருக்கான அறிவுரை-ஆலோசனை (drought counselling)

**‘குடும்ப சச்சரவுத் தீர்வு’ (Family Dispute Resolution)**

தமது குழந்தைகளின் நலனைக் கருத்தில் கொண்டு பிரிவுற்ற பெற்றோர்கள் நல்ல உடன்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளவும், ஒருவரோடு ஒருவர் ஒத்துழைப்பாகச் செயல்பட்டு குழந்தைகளை வளர்க்கவும்; ‘குடும்ப சச்சரவுத் தீர்வு’ (Family Dispute Resolution - FDR) சேவைகள் ஊக்கமளிக்கின்றன.

குழந்தை வளர்ப்பிற்கான திட்டங்களோ அல்லது உடன்பாடுகளோ இந்த சேவைச் செயல்முறையில் கையாளப்படுகின்றன.

**‘குடும்ப வன்முறைத் தடுப்பு’**

வன்முறை மற்றும் துஷ்பிரயோகத்திற்கு ஆளானோருக்கான அறிவுரை-ஆலோசனைகள், சச்சரவுத் தீர்வு சேவைகள், குழுமத் திட்டங்கள் மற்றும் பரிந்துரைகள் வழங்குதல் போன்ற சேவைகளை உள்ளடக்கிய உணர்வு பூர்வமான மற்றும் தொழில் திறமான ஆதரவு சேவைகளை நாங்கள் அளிக்கிறோம்.

தமது செயல்களுக்கு தாமே பொறுப்பு என்பதை குடும்ப வன்முறையைக் கையாளுபவர்கள் உணரவும், மற்றவரை மதித்து எப்படி அவரோடு உறவு கொள்ளலாம் என்பதை அவர்கள் கற்றுக்கொள்ளவும் உதவும் குழுமத் திட்டங்களையும் கல்வி நெறிக ளையும் நாங்கள் வழங்குகிறோம்.

**‘நல்லுறவு யுக்திகள்’**

உறவுகளை வலுப்படுத்த உதவும் பல்வேறுபட்ட ‘சிறு குழுமக் கல்வித் திட்டங்க’ளை RAV அளிக்கிறது.

இது போன்ற பிரச்சினைகளையும், சமாளிக்க இயலாத சூழ்நிலைகளையும் உடைய மற்றவர்களுடன் ஒருவருக்கு இந்த கல்வித் திட்டங்கள் தொடர்பு ஏற்படுத்தித் தரும்.

தமது சூழ்நிலைகளை சமாளிக்கவும், மேம்படுத்தவும் உதவும் புது வழிமுறைகளை இவர்கள் கற்றுக்கொள்வதினால், பிரச்சினைகளும் கவலைகளும் தமக்கு மட்டும் இல்லை, மற்றவர்களுக்கும் இருக்கிறது என்பதை இவர்கள் அறிவர் - எனவே தாம் தனித்திருப்பபதாக இவர்களுக்கு இருந்த உணர்வின் தாக்கம் குறையும்.

**‘சூதாட்டப் பழக்கத்தை நிறுத்துவதற்கான உதவி’**

க்ரம்ப்பியன்ஸ் பகுதியில் வாழும் சமூகத்தினருக்கு உதவுவதற்கென ‘பலராட் நிறுவன மைய’த்திலிருந்து சூதாட்டப் பழக்கத்தை நிறுத்த உதவும் திட்டம் ஒன்றினை RAV வழங்குகிறது.

கட்டுப்படுத்தவியலாத சூதாட்டப் பழக்கத்திற்கு அடிமையானோருக்கு உதவும் இலவச அறிவுரை-ஆலோசனை ஒன்று இத் திட்டத்தின் ஒரு அங்கமாகும்.

**‘பிரிவுற்ற கால பிள்ளைவளர்ப்பு’**

குடும்ப சச்சரவுத் தீர்வுக்கும் மேலாக, சாதாரண அறிவுரை-ஆலோசனை அமர்வுகள் மூலமாக பிரிவடையும் தம்பதியினருக்கு நாங்கள் உதவியளிக்கிறோம்.

தமது குழந்தைகளுக்கேற்ற நல்ல ஏற்பாடுகளைச் செய்வது மற்றும் உணர்வு பூர்வமான முரண்பாடுகளைச் சரி செய்ய முயற்சிப்பது போன்ற FDR சம்பந்தப்பட்ட சட்டத்திற்கு அப்பாற்பட்ட விடயங்களில் அறிவுரை-ஆலோசகர்களால் பெற்றோருக்கு உதவ இயலும்.

பிரிந்து வாழும் தம்பதியினர் பிள்ளைகளை வளர்ப்பது எப்படி என்பது குறித்து தனித்து வாழும் தாய்மார்களும், தந்தையரும் ஒன்று கூடிக் கலந்துரையாடி புது வழி-முறைகளைக் கற்றுக்கொள்ளும் குழுமக் கல்வித் திட்டங்களையும் நாங்கள் வழங்குகிறோம்.

**‘ஆடவர்களும் குடும்ப உறவுகளும்’**

அறிவுரை-ஆலோசனை வழங்கல், கலந்துரையாடல் குழுக்கள், குடும்ப சச்சரவுத் தீர்வு, குடும்ப உறவுகள் மற்றும் பிள்ளை வளர்ப்பு விடயங்களில் ஒத்தாசை மற்றும் உறவுகள் தொடர்பான பிரச்சினைகளிலும், ஒருவரது சுய முன்னேற்றத்திலும் ஒருவருக்கு அளிக்கப்படும் உதவி ஆகியவை எமது ஆடவருக்கான சேவைகளில் உள்ளடங்கும்.